### மலேசிய அரசாங்க பணி ஓய்வு பெற்ற இந்தியர் சங்கத்தின் முயற்சியில்

# தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்கு ஆன்லைன் வகுப்புகள்

கோலாலம்பூர், அக். 15-

கோவிட்-19 தொற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழ்ப்பள்ளி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக மலேசிய அரசாங்க பணி ஓய்வு பெற்ற இந்தியர் சங்கம் உதவிக்கரம் நீட்ட முன் வந்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் முதல் உலகமே முடங்கிய நிலையில் பள்ளி மாணவர்களுக்கு நீண்ட விடுமுறை வழங்கப்பட்டது. இதனால் பள்ளி மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். ஆனாலும் அரசாங்கத்தின் சீரிய முயற்சியில் இணையம் வழி கற்றல் கற்பித்தல் தொடங்கப்பட்டது. இதில் பல மாணவர்கள் பங்கு கொண்டு பயனடைந்தாலும்கூட, வசதி குறைந்த குடும்பத்தைச் சேர்ந்த சில மாணவர்களுக்கு இந்த வாய்ப்பு கிட்டவில்லை.



இதனை கருத்தில் கொண்டு சிலாங்கூர் உலுலங்காட் மாவட்டத்தில் உள்ள 6 தமிழ்ப்பள்ளிகளைச் சேர்ந்த 700க்கும் அதிகமான மாணவர்களுக்கு உதவும் நோக்கில் மடிகணினிகள் உட்பட கைப்பேசி களை வழங்க மலேசிய அரசாங்க பணி ஓய்வு பெற்ற இந்தியர் சங்கம் முன் வந்துள்ளதாக அதன் தலைவர் டாக்டர் பி.ஆர்.அந்தோணிசாமி கூறினார்.

இந்நிலையில் இவ் விவகாரத்தை பிரதமரின் பார்வைக்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அதன் முதல் கட்ட நடவடிக்கையாக நாட்டின் தலைமைச் செயலாளர் டான்ஸ்ரீ ஸூக்கி அலியிடம் இவ்விவகாரம் தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டது. இதையடுத்து விரைவில் பிரதமருடனான சந்திப்பு இடம் பெறும் என தாம் நம்புவதாக டாக்டர் அந்தோணிசாமி கூறினார்.

கல்வியில் இந்திய மாணவர்கள் பின்தங்கி விடக்கூடாது என்பதே மலேசிய அரசாங்க பணி ஓய்வு பெற்ற இந்தியர் சங்கத்தின் உன்னத நோக்கமாகும். அதன் அடிப்படையில் இந்திய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு வருகிறோம். இதில் ஒற்றுமைத் துறை அமைச்சுடன் இணைந்து தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்கு இணையம் வாயிலாக ஆன்லைன் வகுப்புகளை நடத்தவும் ஆயத்தமாகி வருகிறோம். இதற்கான வழிகாட்டுதல்களையும் உதவிகளையும் வழங்க ஒற்றுமைத் துறை அமைச்சு உறுதிக் கூறியுள்ளதாகவும் டாக்டர் அந்தோணிசாமி குறிப்பிட்டார்.

Malaysia Nanban, pg 11, 15 Okt 2020

Akhbar : Malaysia Nanban
Tarikh : 15 Okt 2020
Muka surat : 11

Tajuk : Inisiatif bekas pekerja-pekerja awam bangsa India dalam proses persediaan kelas maya untuk murid-murid SJK Tamil

Rumusan : Berikutan penjejasan pendidikan akibat pandemik Covid-19, Persatuan Bekas Pekerja Awam Bangsa India menghulurkan bantuan kepada para murid SJK Tamil untuk mengambil bahagian dalam kelas maya. Kerajaan telah memperkenalkan sistem baru iaitu 'kelas atas talian' supaya murid-murid dapat belajar dari rumah. Walaupun ramai bermanfaat daripada sistem ini, ada juga sesetengah murid dari keluarga yang kurang bermampu menghadapi cabaran dan ada yang ketinggalan dalam sistem ini. Menurut Dr. Anthony Samy, bagi membantu kumpulan murid-murid ini Persatuan Bekas Pekerja Awam Bangsa India telah memberikan komputer riba dan telefon pintar kepada seramai 700 murid dari 6 sekolah di sekitar Hulu Langat. Tujuan utama persatuan ini adalah untuk memastikan murid India tidak berketinggalan dalam pendidikan. Jadi, pelbagai inisiatif telah dilaksanakan bagi merealisasikan tujuan tersebut. Persatuan ini juga sedia untuk berkolaborasi dengan Kementerian Perpaduan Negara, untuk menjalankan kelas maya kepada murid-murid SJK Tamil. Menurut Dr. Anthony Samy, didapati Kementerian Perpaduan Negara berjanji untuk memberi tunjuk ajar dan bantuan dalam inisiatif ini.